# உதகையில் 1,000 மரக்கன்றுகள் நடும் திட்டம்

## நடிகர் விவேக் தொடங்கி வைத்தார்



உதகை மார்லிமந்து ஏரிக்கரைப் பகுதியில் 1,000 மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைக்கிறார் நடிகர் விவேக். உடன், ஆட்சியர் இன்னசென்ட் திவ்யா உள்ளிட்டோர்.

**உதகை, நவ. 20:** உதகை மார்லிமந்து பகுதியில் 1,000 மரக்கன்றுகள் நடும் பணியை நடிகர் விவேக் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

உதகை மார்லிமந்து பகுதியில் நடைபெற்ற மரக்கன்றுகள் நடும் நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் இன்னசென்ட் திவ்யா முன்னிலையில் நடிகர் விவேக் 1,000 மரக்கன்றுகளை நடும் பணியினைத் தொடங்கி வைத்தார்.

பின்னர் இது குறித்து ஆட்சியர் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 10,000 மரங்கள் நடவு செய்யப்பட உள்ளன. முதற்கட்டமாக 1,000 மரக்கன்றுகள் மார்லிமந்து ஏரிக்கரைப் பகுதியில் நடவு செய்யப்படுகின்றன. நீலகிரி மாவட்டம் மலைகளின் அரசியாகவும், சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. தமிழக அரசு அடுத்த ஆண்டு முதல் பிளாஸ்டிக் பயன்பாட்டினை முற்றிலும் தடை செய்ய ஆணையிட்டுள்ளது. எனவே, அன்றாடம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

துணிப் பைகள், காகிதம், சணல் பைகள், மூங்கில் மரப்பொருள்கள், மண் குவளைகள், மண் கரண்டிகள் போன்ற பொருள்களை பயன்படுத்துவதன் மூலம் பிளாஸ்டிக்கை முற்றிலும் தவிர்ப்பதோடு, நம்மால் முழுமையாக பிளாஸ்டிக் இல்லாத தமிழகத்தை உருவாக்கவும் முடியும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பிளாஸ்டிக் பயன்பாட்டினை ஒழிக்க பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியர்கள் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

மாவட்ட வருவாய் அலுவலர் செல்வராஜ், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் சிவசுப்பிரமணியம் சாம்ராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் பாபு, உதகை கோட்டாட்சியர் சுரேஷ், அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

## 'தலைக்கவசம்' அவசியம் குறித்து நடிகர் விவேக் விழிப்புணர்வுப் பிரசாரம்

நீலகிரி மாவட்ட காவல் துறை சார்பில் உதகை சேரிங்கிராஸ் பகுதியில் சாலைப் பாதுகாப்பு, தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து வாகன ஓட்டிகள், மாணவர்களிடம் நடிகர் விவேக் செவ்வாய்க்கிழமை விழிப்புணர்வுப் பிரசாரம் செய்தார்.

இந்நிகழ்வில், தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டி வந்தவர்களை நடிகர் விவேக், மாவட்ட ஆட்சியர் இன்னசென்ட் திவ்யா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சண்முகப்பிரியா ஆகியோர் பாராட்டு, இனிப்பு வழங்கினர். அதைத் தொடர்ந்து உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் மாவட்ட ஆட்சியர் இன்னசென்ட் திவ்யா முன்னிலையில் நடிகர் விவேக் சுற்றுலாப் பயணிகள், பொது மக்களிடம் பிளாஸ்டிக் பயன்பாடு ஒழிப்பு, சாலைப் பாதுகாப்பு, தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இதில், சுற்றுலாப் பயணிகள், மாணவ, மாணவியருக்கு மாவட்ட ஆட்சியர், நடிகர் விவேக் ஆகியோர் துணிப் பைகளை வழங்கினர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் பாபு, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் சிவசுப்பிரமணிய சாம்ராஜ், காவல் துறை அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவியர், சுற்றுலாப் பயணிகள், வாகன ஓட்டிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.